

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, எலப்பாக்கம் ஒன்றியத்தில், வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.கழக கொறடாவு மான எ.வ.வேலு கலந்து கொண்டு தேர்தல் பணிக்குறித்து ஆலோசனைகள் வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர் சுந்தர், முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எஸ். தரணிவேந்தன், செல்வம், தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் ராஜேந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ., கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் கோகுல கண்ணன் உட்பட பலர் இருந்தனர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி வாக்கு சேகரிப்பு!

# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற நீதிமன்றத்தை அணுகியுள்ளோம்!

## தேர்தல் பிரச்சாரத்தில் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தகவல்!

புதுச்சேரி, செப்.24-

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சேதுசெல்வத்தை ஆதரித்து அத்தொகுதிக்கு உட்பட்ட புதுப்பேட்டை பகுதியில் திமுக தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் க. பொன்முடி, மாநில அமைப்பாளர் இரா. சிவா ஆகியோர் தலைமையில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். அப்போது ஏராளமான பெண்கள் ஆரத்தி எடுத்தும், பூக்கள் தூவியும் தி.மு.க. வேட்பாளருக்கு வரவேற்பு அளித்தனர்.

பிரச்சாரத்தின் இடையே செய்தியாளர்களை சந்தித்து தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., சட்டமன்ற பொது தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்ட பல தொகுதிகளில் டெபாசிட் இழந்துள்ளது. தமிழ்நாட்டில் திமுக இல்லையென்றால் காங்கிரஸ் இல்லை. தட்டாஞ்சாவடி தொகுதியில் சாலை வசதி, கழிவுநீர் கால்வாய், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முறையாக இல்லை. மழை பெய்தால் பல்வேறு பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்கிறது. புதுச்சேரியில் தற்போதைய சட்டம் ஒழுங்கு மோசமாக உள்ளது. 3 நாட்களில் 3 கொலைகள் நடைபெற்றுள்ளது. தொகுதியில் அடிப்படை வசதிகள் மற்றும் சட்டம்ஒழுங்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காண மாற்றம் தேவை.

தட்டாஞ்சாவடி இடைத் தேர்தலில் விஜய் அலை வீசு



கிறது என கனவு காண அனைவருக்கும் உரிமை உள்ளது. புதுச்சேரியின் வளர்ச்சிக்கு மாநில அந்தஸ்து மிகவும் அவசியம். புதுச்சேரிக்கு தனி மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் உத்தரவின் பேரில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதன் மூலம் புதுச்சேரிக்கு தனி மாநில அந்தஸ்தை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்திலும் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என தொடர்ந்து குரல் கொடுப்போம்.

இவ்வாறு ஜெகத்ரட்சகன் எம்.பி. கூறினார்.

### மின்சாரம் இல்லை, மின் கட்டணக் கொள்ளை! பால் விலை உயர்வு!

# குடிக்க தண்ணீர் இல்லை! குடிநீர் வழங்கல் துறை தனியாருக்கு தாரை வார்ப்பு!

## த.வெ.க. அரசுக்கு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை.செப்.24-

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு த.வெ.க.ஆட்சி அமைய வாக்களித்த மக்கள் படும் துன்பம் குறித்து தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.

த.வெ.க. ஆட்சி அமைய வாக்களித்த மக்கள் படும் துன்பம் மின்சாரம் இல்லை! மின் கட்டணக் கொள்ளை,ஆவின் பால் கிடைப்பதில்லை! பால் விலை உயர்வு, குடிக்க தண்ணீர் இல்லை! குடிநீர் வழங்கல் துறை தனியார்க்கு தாரை வார்ப்பு, பரந்தூர் விமான நிலையம் ரத்து! சென்னை விமான நிலையம் பல கோடிக்கு அதானிக்கு விற்பனை.

தமிழ்நாட்டின் கனிம வளங்கள் ஆந்திரா ரெட்டி கேங்கிடம் பல கோடிக்கு விற்பனை, தமிழ்நாட்டில் ஓட்டுனர் நடத்துனர்களுக்கு வேலை இல்லை! வட மாநிலத்தவர்க்கு வேலை விற்பனை இது தான் உங்கள் ஆட்சியின் லெட்சணமா CMsir ?

ஊழலற்ற ஆட்சி என்று தம்பட்டம் அடிக்கும் முதல்வரே ஆட்சி அமைக்க ஆதரவளித்த



M.L.A.களுக்கு பல நூறு கோடி ரூபாய் எங்கிருந்து வந்தது CMsir?

தி.மு.க.ஆட்சியில் கஜானா காலி 10 லட்சம் கோடி ரூபாய் கடன் என்று குற்றம் சாட்டும் முதல்வரே! உங்களுக்கு மக்கள் வரிப்பணத்தில் பல கோடி ரூபாய் சொகுசு அறை ஒரு கேடா ? காவேரிக்கு தண்ணீர் வாங்க துப்பில்லாத முதல்வரே! மேட்டூர் அணை திறக்க மக்கள் வரிப்பணத்தில் ரூபாய் 6 கோடி ஆடம்பர செலவு தேவையா? இத்தனையும் செய்து கொண்டே புனிதர், புத்தர், காந்தி ஆட்சி என்று சொல்லிக்கொள்ள வெட்கமா இல்லையா CMsir?

சினிமாவில் மீனவ நண்பன்! நிஜத்தில் குமரி மாவட்ட மீனவ கிராமங்களில் கனிம வளம் எடுக்க கார்ப்பரேட்டுகளுக்கு அனுமதி, தமிழக மீனவர்களுக்கு எதிராக ஒன்றிய அரசு கொண்டு வந்த “சாகர் மாலா” திட்டத்திற்கு ஆதரவு! தமிழக மீனவர்கள் சுருக்குமடி செல்ல அனுமதி மறுப்பு, கம்பராமாயணத்தில் சீதை மாயமான் கேட்டது போல், பட்டினப்பாக்கத்தில் புதிய சட்ட மன்றம் யாருக்காக CMsir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.

# ‘தூயசக்தி’ தூங்குவதேன்?

“சுதந்திரப் போராட்ட வீரரின் பெயர்கொண்ட தூங்கா நகரத்தைச் சேர்ந்த த.வெ.க மாவட்டச் செயலாளர் ஒருவர், திருட்டு மணல் ஓட்டுவதில் தினமும் பல லட்சம் ரூபாய் கொள்ளையடிக்கிறாராம். தினமும் 200 லாரிகள் அவருக்கு ஓடுகின்றனவாம். ஏரியா மாண்புமிகுவின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி, அடங்க மறுப்பதால், சொந்தக் கட்சிக்காரர்களே செய்வதறியாமல் தவிக்கிறார்கள்.”

**இப்படி ஒரு குறிப்பு ஜூனியர் விகடனில் (மிஸ்டர் கழுகு பகுதி - 27.9.2026) வெளியாகி உள்ளது. ‘தூய ஆட்சி’க்குச் சொந்தக்காரர் பேசாமல் இருக்கிறாரே; என்ன காரணம்? ஒரு சமயம் ‘டவுசர் பாண்டி’க்கு நெருக்கமானவர் அந்தப் ‘பாண்டி’ என்பதாலோ?**

### கிருஷ்ணகிரி அரசு பள்ளியில்

# காலை உணவுத்திட்ட விரிவாக்கத்தில் குளறுபடி!

## ஓட்டல்களில் சாப்பாடு வாங்கி கொடுத்த அவலம்!

கிருஷ்ணகிரி, செப்.24-

கிருஷ்ணகிரி அரசு பள்ளியில் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தில் குளறுபடி ஏற்பட்டது. இதனால் ஓட்டல்களில் மாணவிகளுக்கு சாப்பாடு வாங்கி கொடுத்த அவலம் நடந்தது.

**காலை உணவுத்திட்டம்**

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு, அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் விரிவாக்க விழா நேற்று நடந்தது.

சென்னையில் முதல் அமைச்சர் விஜய் தொடங்கி வைத்ததுடன், அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர்கள், மாவட்ட கலெக்டர்கள் தொடங்கி வைத்தனர்.

**கிருஷ்ணகிரியில்...**

கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் காலை உணவுத் திட்டம் தொடக்க விழா நேற்று முன்தினம் நடந்தது. மொத்தம் 430 மாணவிகளுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. முகுந்தன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கலெக்டர் தினேஷ்குமார் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார். 2 குழுக்களாக மாணவிகள் பிரித்து அமர வைக்கப்பட்டனர். கலெக்டர் தொடங்கி வைக்கும் போது முதல் குழுவான 250 மாணவிகளுக்கு வெண்பொங்கல், காய்கறி சாம்பார் மற்றும் இனிப்பு பொங்கல் வழங்கப்பட்டது. அந்த உணவும் மாணவிகளுக்கு போதுமானதாக இல்லையாம். தொடர்ந்து 2வது குழுவுக்கு உணவு வழங்க ஊழியர்கள் தயாரானார்கள். ஆனால் அங்கு உணவு இல்லை. எனவே சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவிகள் தட்டுடன் காத்திருந்தனர். பசியால் அந்த மாணவிகள் கடும் சிரமத்தை சந்தித்தனர்.

**ஓட்டல் சாப்பாடு**

கலெக்டர் மற்றும் கல்வித் துறை அதிகாரிகள் அங்கிருந்து சென்று விட்டனர். அதன்பிறகு உணவு கிடைக்காத மாணவிகளுக்கு பள்ளிக்கூட ஆசிரியர்களே சாப்பாடு கொடுக்க ஏற்பாடு செய்தனர். கிருஷ்ணகிரியில் உள்ள ஓட்டல், ஓட்டலாக சென்று 200க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு சாப்பாடு வாங்கும் அவலம் நடந்தது.

அப்போது ஓட்டல் நிர்வாகத்திடம் என்ன சாப்பாடு இருக்கிறதோ, அதனை தாருங்கள் என்று வாங்கினர். அதாவது இட்லி, தோசை, பூரி, பொங்கல் என என்ன இருக்கிறதோ அதனை வாங்கி மாணவிகளுக்கு கொடுத்தனர். அப்படி இருந்தும் மாணவிகளுக்கு உணவு கொடுக்க 10.30 மணி ஆகிவிட்டதாம். இதனால் பெற்றோர் கடும் அதிர்ச்சி அடைந்தனர். காலை உணவத் திட்ட விரிவாக்கத்தில் முதல் நாளிலேயே குளறுபடி ஏற்பட்டுள்ளது மாணவிகள், பெற்றோர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

### ஆசிய விளையாட்டு கிரிக்கெட்:

# இந்திய மகளிர் அணி வெற்றி!

நிஷன், செப். 24–

மகளிருக்கான ஆசிய கோப்பை இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின. டாஸ் வென்ற இந்தியா பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 216 ரன்கள் குவித்தது.

முதல் விக்கெட்டுக்கு ஷபாலி வர்மாஸ்மிருதி மந்தனா ஜோடி 99 ரன்கள் எடுத்தது. அரை சதம் கடப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில். ஷபாலி வர்மா 48 ரன்னில் ஆட்டம் இழந்தார். அவர் 28 பந்தில் 3 சிக்சர், 3 பவுண்டரி உள்பட 48 ரன்கள் குவித்தார்.

தொடர்ந்து ஆடிய ஸ்மிருதி மந்தனா அரை சதம் கடந்து 79 ரன்னில் ஆட்டமிழந்தார். ஹர்மன்பிரீத் கவுர் 19 ரன்னில் அவுட்டானார். கடைசி கட்டத்தில் இறங்கிய ரிச்சா கோஷ் 22 பந்தில் 3 சிக்சர், 6 பவுண்டரி உள்பட 49 ரன் குவித்தார். இதையடுத்து, 217 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை களமிறங்கியது.

இறுதியில், இலங்கை அணி 15.4 ஓவரில் 69 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 147 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றதுடன், ஆசிய போட்டியில் மீண்டும் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றி அசத்தியது.

இலங்கை அணி வெள்ளிப் பதக்கம் வென்றது. பாகிஸ்தான் அணி வெண்கலம் வென்றது.

இந்தியா சார்பில் தீப்தி சர்மா 3 விக்கெட், ஷபாலி வர்மா, ஸ்ரீசரணி, ஷ்ரேயங்கா பாட்டீல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

கடந்த ஆசிய விளையாட்டிலும் மகளிர் கிரிக்கெட்டில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் கிழக்கு ஒன்றியம், குமாரபாளையம் ஊராட்சி, வடுகப்பட்டியில் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மூலனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.பழனிசாமி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், ஒன்றிய கழக செயலாளர்கள் பி.சி.தங்கம், கே.சி.பாலு, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் நா. செல்லமுத்து, பேரூராட்சி தலைவர் சிக்கந்தர் பாட்ஷா உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் சிறுநல்லூர் ஊராட்சியில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.கணேசன் வாக்கு சேகரித்தார். உடன் நிர்வாகிகள் உள்ளனர்.